[1994 ஏப்ரல் 13

மாவட்டத்தில் தேவைப்படுகிற இடத்திற்கு விவசாயிகளின் நலன் கருதி, நிதிநிலைக்கு ஏற்றவாறு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 269, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

269—

நாமக்கல் கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரிக்கு நிலம் வழங்கிய குடும்பங்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

*** 9661**— திருமதி ப. சரஸ்வதி:*

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரிக்கு நிலம் எடுக்கப்பட்ட குடும்பங்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு நிலம் அளித்தவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு பல்கலைக் கழகத்தில் வேலை வழங்க அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனூர் ஒன்றியம், நாமக்கல் கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் கல்லூரிக்கு நிலம் எடுக்கப்பட்டவர்களின் குடும்பங்களில் மிகவும் ஏழ்மைப்பட்டு, விவசாயத்தை நம்பி வாழ்ந்த அந்தக் குடும்பங்கள் தங்களுடைய அனைத்து நிலங்களும் கால்நடைக் கல்லூரிக்கு எடுக்கப்பட்ட பிறகு, அவர்கள் பணம் கொடுத்திருந்தாலும், அந்தப் பணத்தை வைத்து எந்தத் தொழிலையும் தொடங்க இயலாமல், வியாபாரம் செய்ய அவர்களுக்குத் தேவைப்படுகிற அறிவாற்றல் இல்லாமல், கூலி ஜீவனம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று உத்தரவாதம் கொடுத்ததாக அறிகிறேன். அவர்களின் குடும்பங்களுடைய வாரிசுகளுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 நபர்கள் விண்ணப்பம் செய்தார்கள். அவர்களில் 3 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள 4 பேர்களுக்கு மட்டுமல்லாமல், இன்னும் அவர்கள் குழந்தைகள் எல்லாம் மைனர்களாக இருக்கிற காரணத்தால் நிறைய பேர் மனு செய்யக்கூடிய வாய்ப்பு இல்லாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் படித்து, தகுதியின் அடிப்படையில் அந்தக் கல்லூரியில் வேலை வாய்ப்பு கோருகிறபோது, அந்தக் கல்லூரியில் வேலை வாய்ப்பு அளிக்க முன்வருவதோடு, அந்தப் பிள்ளைகளுக்கு அந்தக் கல்லூரியில் படிக்க இடவசதி அளிக்கவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினக்கூலி அடிப்படையில், அதாவது 'டெய்லி வேஜஸ்' என்பார்களே, அந்த அடிப்படையில், முதலிலே 85 நாட்களுக்கு அனுமதித்துவிட்டு, பின்னால் வாய்ப்பு வரும்போது நிரந்தரமாக்கப்படலாம் என்ற ஒரு விதி இருக்கிறது. எனவே, தினக்கூலி அடிப்படையிலாவது நிலம் கொடுத்தவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினக்கூலி அடிப்படையில் எடுக்கின்றபோது, இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 270, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

270—

பணிபுரியும் மகளிர்களுக்கு சங்ககிரியில் விடுதி அமைத்தல்.

*** 20490—** டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—